மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டார அளவிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவ லகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். ஒவ்வோர் ஒன்றிய அலுவலகத்திலும் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட வட்டார அலுவலகத்திற்கு ஓர் இடம் கொடுக்க வேண்டுமென்று இத்துறை முயற்சி எடுத்து வருகிறது. தனியாக இருக்கும் அலுவலகக் கட்டடத்தையும் பராமரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.P. *நந்தகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

மின்மாற்றி

***38089—திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் பேரூர், 3–வது வார்டு, பெரியார் நகரில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் பேரூர், 3–வது வார்டு, பெரியார் நகரில் ஏற்கெனவே ஒடுகத்தூர் SS–I/100 *கே.வி.ஏ. மின்மாற்றியிலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட ஒடுகத்தூர் பேரூராட்சி, 3-வது வார்டில் 100 கே.வி.ஏ. மின்மாற்றி செயல்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஒடுகத்தூர் பேரூராட்சி என்பது வளர்ந்துவரும் பகுதி. மக்களினுடைய மின் தேவை அதிகரிக்கின்ற காரணத்தினால், அங்கே இன்னொரு 110 கே.வி.ஏ. மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கழகத் தலைவருடைய ஆட்சியிலே கத்தேரிக்குப்பம் கிராமத்தில் ஒரு* sub-station *அமைத்துத் தந்தார்கள். அந்த* sub-station *அமைந்திருக்கின்ற இடத்திலிருந்து நேராகச் சென்றால் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம். அது வனத் துறை சாலையின் வழியாகச் செல்கின்ற காரணத்தினால், வனத் துறை அதற்கு அனுமதி அளிக்காததால், கழகத் தலைவர் ஆட்சியிலே அமைக்கப்பட்ட கத்தேரிக்குப்பம்* sub-station*-க்கு சற்றேறக்குறைய 5 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரக்கூடிய நிலை இருக்கிறது. அதனால் அரசுக்கு செலவு அதிகரிப்பதால், வனத் துறை அதற்கு அனுமதி தர வேண்டும். காரணம், அணைக்கட்டு தொகுதியானது கிராமங்கள் நிறைந்த பகுதி. வனத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதியைப் பெற்றுத் தந்து, அந்த* sub-station*-க்கு உண்டான பணத்தை மிச்சப்படுத்த வேண்டும். இதனால் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான இடத்தின் வழியாக மின் கம்பங்கள் அல்லது மின் வயர்கள் என மின் வழித்தடங்களை அமைக்கின்றபோது வனத் துறையினுடைய அனுமதியைப் பெறுவது என்பது சற்று கடினமாக இருக்கின்றது. அதனால் திட்டங்களைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, அதனைக் கருத்தில்கொண்டு, விரைவாக,*

[2023 மார்ச் 28

சீரான மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக அவ்வாறு வடிவமைக்கப்பட்டது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதை துறையினுடைய அதிகாரிகளிடத்திலே பேசி, அது மறுஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் மட்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, 132 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, அங்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஒரே தொகுதியில் 132 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை நான் பேசுகின்றபோது என்னுடைய அணைக்கட்டு தொகுதியில் இருக்கக்கூடிய பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை, பாலாம்பட்டு மலைக் கிராமங்கள், சற்றேறக்குறைய 20 ஆயிரம் மக்கள் வசிக்கக்கூடிய அந்த மலைக் கிராமங்களில் மழை பெய்கின்றபோதும், காற்று அடிக்கின்றபோதும் மின்கம்பங்கள் சாய்ந்து, சற்றேறக்குறைய ஒருவார காலம் அங்கே மின்சாரம் தடைபடுகிறது என்பதால் அங்கே sub-station *ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆட்சி அமைந்த பிறகு, தலைவரின் ஆட்சியில் அங்கே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், கேள்வியை மட்டும் கேளுங்கள். தற்போது உங்கள் தொகுதியில் என்ன வேண்டும்?*

2023 மார்ச் 28]

திரு. A.P. நந்தகுமார்: *மூன்று மலைக் கிராமங்களுக்கும் 110 கே.வி. துணை மின் நிலையத்தை அமைத்துத்தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த முறை கேட்கின்றபோது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு ஏக்கர் நிலம் வேண்டுமென்று சொன்னார்கள். தற்போது இரண்டு ஏக்கர் நிலம் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தயார் நிலையில் இருக்கிறது. ஆகவே, இடம் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 110 கே.வி. துணை மின் நிலையத்தை அமைத்துத்தர வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அணைக்கட்டு தொகுதிக்கு மூன்று புதிய துணை மின்நிலையங்களை ஏற்கெனவே வழங்கி, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்தப் பகுதிகளுக்கு வருகின்ற ஆண்டில் தேவை ஏற்படின் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், மங்காடு ஊராட்சி, குளிச்சான் என்னும் இடத்தில் அதிகமான குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. அந்தக் குடியிருப்புப் பகுதிகளுக்குமேல் உயர் மின் அழுத்தக் கம்பிகளும், மின் கம்பங்களும் செல்கின்றன. கிட்டத்தட்ட 11 மின் கம்பங்கள் இருக்கின்றன. அந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கருதி, அவற்றைப் போர்க்கால அடிப்படையில் மாற்றியமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாமன்ற உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து என்னிடம் தெரிவித்திருக்கின்றார்கள். துறைக்கு அது அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. 15 தினங்களுக்குள் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். எனவே, 15 தினங்களுக்குள் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில், சித்ரா பவுர்ணமி அன்று எட்டு புஷ்பப் பல்லக்குகள் வருகின்றன. எட்டு புஷ்பப் பல்லக்குகள் வருகின்றபோது இரவிலே மின்சாரத்தை* off *செய்கிறார்கள். அதைத் தொடர்ந்து 12 மணி அளவில் மின்சாரத்தை* off *செய்தால், காலை 8–9 மணி அளவில்தான் மின்சாரம் தருவார்கள். அதனால்,* underground cable *போட்டுத் தந்தால் சிறப்பாக இருக்கும். தோட்டப்பாளையம் பகுதி, சி.எம்.சி. பகுதி, காந்தி ரோடு முதல் மண்டி தெரு வரையில் இதைச் செய்து கொடுத்தால்கூட சிறப்பாக இருக்கும். வேலூர் மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டியாக இருக்கிறது. சித்ரா பவுர்ணமி அன்று 8 புஷ்பப் பல்லக்குகள் வருவதால் இதனைச் சிறப்பு நேர்வாகக் கருதி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரலாற்றில், 36,550 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, சீரான மின் விநியோகத்திற்கான*

2023 மார்ச் 28]

கட்டமைப்புகளை உருவாக்கிய அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேலூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 363 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வரும் ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.*

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் தொகுதியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்கெனவே இடங்கள் அதிகாரிகளால் பார்க்கப்பட்டன. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே மின் தட்டுப்பாடு ஏற்பட்டு, குடியிருப்போருக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுவதால், உடனடியாக துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, 316 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்ட நிலையில், கூடுதலாக 36 துணை மின் நிலையங்களுக்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, துறையினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 52 துணை மின் நிலையங்களின் பட்டியலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2023 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கடலூர் தொகுதி மற்ற தொகுதிகளைப்போல் மக்கள் தொகையில் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. கட்டடங்களும் அதிகமாக கட்டப்பட்டு வருகின்றன. கடலூரும், புதுவையும் இணைந்து இருப்பதால் புதுவையில் இருக்கின்ற நடுத்தர ஏழை மக்கள் தமிழகத்தின் கடலூர் பகுதியில் புதியதாக வீடுகளைக் கட்டி குடிபெயர்ந்து வருகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்கு என்ன வேண்டும் என்பதைக் கேளுங்கள்.

திரு. கோ. ஐயப்பன்: அந்தவகையில் கடலூர் தொகுதி, புதுக்கடையில் இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டு, ஒரு வருடமாக அங்கு வேலிகள் அடைக்கப்பட்டு, மதில் சுவர் அடைக்கப்பட்டு மின்சார வாரியம் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தயாராக இருந்து கொண்டிருந்த நிலையில் இன்னும் அரசின்மூலமாக நிதி வழங்கப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 316 துணை மின் நிலையங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கடலூர் தொகுதிக்குட்பட்ட திருப்பாதிரிபுலியூர், அதாவது புதுக்கடை என்ற இடத்தில் 110/22 என்ற புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை செயல்முறையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் இரண்டு 110 கே.வி. துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அதாவது, சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சியில் 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தாழம்பட்டு ஊராட்சியில் 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, தமிழக மின் பகிர்மானக் கழகத் தலைவர் அலுவலகத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் சீரான மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து உதவிடுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதியில் இரண்டு புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கி, அதில் ஒன்றில் ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடைபெற்று வருகின்றது. இன்னொன்று நிருவாக அனுமதி கோருகின்ற நிலையில் இருக்கின்றது. எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் இரண்டு துணை மின் நிலையங்களையும் அமைத்து, முழுமையாக பணிகள் நிறைவு பெறுவதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

திருத்தேர்

***21353—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—